


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ மே. 07, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 212 ❖ ரூ.10

காவல் நிலையத்தில் இளைஞர் உயிரிழந்த சம்பவம் கொலை வழக்காக மாற்றம்

# விஸ்வரூபம்

## விக்னேஷ் மரண வழக்கில் தொடர்புடைய 5 காவலர்களை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரை



சென்னை, மே. 7:

சென்னை கீழ்ப்பாக்கம் கெல்லீஸ் பகுதியில் பட்டாக்கத்தி மற்றும் கஞ்சா வைத்திருந்ததாக பட்டினம்பாக்கத்தைச் சேர்ந்த விக்னேஷ் தலைமை செயலக காலனி போலீசாரால் ஏப்ரல் 18 ம் தேதி கைது செய்யப்பட்டார். அன்று இரவே அவர் விசாரணையின் போது உயிரிழந்தார்.

இந்த வழக்கு கடந்த மாதம் 24ம் தேதி சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு விசாரணை தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. விக்னேஷ் உடலில் 13 காயங்கள் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சட்டசபை கூட்டத்தில் விக்னேஷ் மரண வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது என அறிவித்தார்.

இதனிடையே வழக்கு தொடர்பாக சிபிசிஐடி போலீசார் மூன்றாவது நாளாக நேற்று விசாரணை மேற்கொண்டனர். குறிப்பாக விக்னேஷ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள உதவி ஆய்வாளர் புகழும் பெருமாள், காவலர் பொன்ராஜ், ஊர் காவல் படை காவலர் தீபக் ஆகிய 3 பேர் உட்பட தலைமைச் செயலக காலனி காவல் ஆய்வாளர் செந்தில்குமார், உதவி ஆய்வாளர் கணபதி, எழுத்தர் முனாஃப், ஆயுதப்படை காவலர் கார்த்திக், தலைமை காவலர் குமார், பெண் காவலர் ஆனந்தி ஆகிய ஒன்பது நபர்கள் சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்காக நேற்று ஆஜராகினர்.

அவர்களிடம் சிபிசிஐடி போலீசார் நேற்று காலை 11 மணியிலிருந்து விசாரணை மேற்கொண்டனர். தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றி பதிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளதால், இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக யார் சேர்க்கப்படுவார் என்பது மிகுந்த முக்கியத்துவம் பெறும்.



அதுமட்டுமல்லாமல் மூன்றாவது நாளாக நேற்று காவல் ஆய்வாளர் செந்தில்குமார் உட்பட 9 பேர் ஆஜராகி இருந்ததால் இந்த வழக்கில எத்தனை பேர் சேர்க்கப்படுவார்கள் என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த வழக்கில் தொடர்புடைய உதவி ஆய்வாளர் புகழும் பெருமாள், பொன்ராஜ், தீபக் ஆகிய 3 பேர் ஏற்கனேவே பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் அம்மூவரும் முதலில் கைது செய்யப்படலாம் என சிபிசிஐடி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் விக்னேஷ் மரண வழக்கில் தொடர்புடைய 5 காவலர்களை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என தமிழ்நாடு தலைமைச் செயலருக்கும், டிஜிபிக்கும் தேசிய எஸ்சி எஸ்டி ஆணைய துணைத் தலைவர் அருண் ஹல்தெர் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்யவும் பரிந்துரை செய்துள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

## எங்களை மோசமானவர்கள் என பாஜக, ஆர்எஸ்எஸ் கூறினால் அது உண்மைதான் பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா

சென்னை , மே. 7:

எங்களை மோசமானவர்கள் என பாஜக அல்லது ஆர்எஸ்எஸ் அமைப்பு கூறினால் அது உண்மைதான் என பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா தமிழ்நாடு தலைவர் முகமது ஷேக் அன்சாரி தெரிவித்துள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் மறைந்த லெப்டினன்ட் ஜெனரல் சப்ரோடோ மித்ரா எழுதிய *THE LURKING HYDRA* புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா மிகவும் ஆபத்தான இயக்கம். இவர்கள் மாணவர்களைபோலவும், மனித உரிமை இயக்கம் போலவும், அரசியல் இயக்கம் போலவும் முகமூடிகளை அணிந்து கொண்டு நம் நாட்டில் இயங்கி வருகின்றனர். மேலும் தீவிரவாத இயக்கங்களுக்கு ஒரு பின்புலமாகசெயல்பட்டு வருகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினார்.




இந்நிலையில், ஆளுநரின் கருத்து தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா தமிழ்நாடு தலைவர் முகமது ஷேக் அன்சாரி கூறும்போது, இந்தியா முழுவதும் பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா பல்வேறு மக்கள் பிரச்சினைகளை முன்னெடுத்து போராடும் ஒரு அமைப்பாகசெயல்பட்டு வருகிறது. யார் என்ன சொன்னாலும் மக்கள் பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவை நன்றாக புரிந்து வைத்துள்ளனர். இந்த ஆட்சியில் நல்லவர்களை கெட்டவர்களாகவும் கெட்டவர்களை நல்லவர்களாகவும் சித்தரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கொரோனா காலத்தில் இறந்த உடல்களை யாருமே தொடுவதற்கு முன்வராத சூழலில் முதல்முதலாக பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா உறுப்பினர்கள் அனைத்து மத உடல்களையும் அவர்களின் இறுதி சடங்கு நடைமுறைப்படி முன்னெடுத்து பணிகளை ஆற்றினர்.

இந்தநிலையில் தமிழக ஆளுநர் இதுபோன்று கருத்து தெரிவித்திருப்பது ஆர்எஸ்எஸின் குரலாக அவர் பேசியதை போல்தான் இருந்தது. ஆர்எஸ்எஸ், பாஜகவும் வன்முறைக்கும் எத்தனை சம்பந்தம் உள்ளது என்பதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது. ஆனால் பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா குறித்து தீவிரவாத அமைப்பாக சித்தரிக்க என்ன ஆதாரம் உள்ளது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

சிஏஏ, ஹிஜாப் உள்ளிட்ட விவகாரங்களில் பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா தூண்டுதலின் பெயரில் போராட்டங்கள் நடைபெற்றதாக சித்தரிக்க நினைக்கிறார்கள். அப்படி சித்தரிக்க நினைப்பது தவறில்லை மக்கள் பிரச்சனைக்காக முன்னின்று போராடவில்லை என்றால் தான் தவறு.

அந்தவகையில், எங்களை மோசமானவர்கள் என பாஜக அல்லது ஆர்எஸ்எஸ் அமைப்பு கூறினால் அது உண்மைதான். அவர்கள் செய்யும் தவறான செயல்களுக்கு நாங்கள் முட்டுக்கட்டையாக இருப்பதால் அவர்கள் அப்படி கூறுவார்கள் என்று கூறினார்.




தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதை கண்காணிக்க அமைக்கப்பட்ட சமூகநீதி கண்காணிப்பு குழுவிற்கான புதிய அலுவலகத்தை நேற்று அமைச்சர் கீதா ஜீவன் சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு சொந்தமான கட்டிடத்தில் திறந்து வைத்தார். நிகழ்வில் சமூகநீதி கண்காணிப்புக் குழுவின் தலைவர் சுப. வீரபாண்டியன், சமூக சீர்திருத்தத் துறையின் முதன்மை செயலாளர் முழு கூடுதல் பொறுப்பு மங்கத் ராம் சர்மா, குழுவின் உறுப்பினர்கள் தனவேல், சுவாமிநாதன் தேவதாஸ், மனுஷ்ய புத்திரன், ஜெய்சன், ராஜேந்திரன், கருணாநிதி, மருத்துவர் சாந்தி ரவிந்திரநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அமலாக்கத்துறை அனுப்பிய சம்மனுக்கு தடை – உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மே. 7:

**அரசு வேலை வாங்கி தருவதாக மோசடி வழக்கில் சட்டவிரோத பண பரிமாற்றம் தொடர்பான விசாரணைக்கு ஆஜராகும்படி, அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளிட்டோருக்கு அமலாக்கப்பிரிவு அனுப்பிய சம்மனுக்கு இடைக்கால தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

கடந்த 2011 –15ம் ஆண்டுகளில் அதிமுக ஆட்சியில்,போக்குவரத்து துறை அமைச்சராக பதவி வகித்த செந்தில் பாலாஜி, அத்துறையில், ஓட்டுநர் மற்றும் நடத்துனர் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடி செய்ததாக சென்னை மத்திய குற்ற பிரிவு போலீசார், 3 வழக்குகளை பதிவு செய்தனர்.

இந்த வழக்குகள் எம்.பி – எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இதற்கிடையில், இந்த மோசடியில் சட்ட விரோத பண பரிமாற்றம் தொடர்பாக, செந்தில் பாலாஜிக்கு எதிராக அமலாக்கப் பிரிவும் 2021ம் ஆண்டு வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த விசாரணைக்காக, செந்தில் பாலாஜிக்கு எதிரான சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள 3 வழக்குகள் தொடர்பான ஆவணங்களை வழங்க கோரி அமலாக்கப் பிரிவு துணை இயக்குனர் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த எம்.பி, எம்.எல்.ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், தள்ளுபடி செய்தது. சிறப்பு நீதிமன்ற உத்தரவை எதிர்த்தும், ஆவணங்களை வழங்க உத்தரவிட கோரியும் அமலாக்கப் பிரிவு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், சான்றளிக்கப்பட்ட குறியீடு செய்யபடாத ஆவணங்களை வழங்க மறுத்த சிறப்பு நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தும் அந்த ஆவணங்களை ஆய்வு செய்து பின் நகல் வழங்க கோரி அமலாக்க பிரிவு சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம் தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து குற்றம்சாட்டப் பட்டவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், குறியீடு செய்யப்படாத ஆவணங்களை வழங்க வேண்டும் என்ற உயர்நீதிமன்ற உத்தரவிற்கு தடை விதித்து உத்தரவிட்டது. இதையடுத்து வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சண்முகம் வரும் 9ம் தேதியும், செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் குமார் 12ம் தேதியும், அமைச்சர் செந்தில் பாலாஜியை 13ம் தேதி ஆஜராகும்படி, அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது.



அமலாக்கப் பிரிவின் சம்மனை எதிர்த்து சண்முகம் தாக்கல் செய்த மனுவில், வழக்கில் குறியீடு செய்யபட்டதா ஆவணங்களை அமலாக்க பிரிவுக்கு வழங்க உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், எந்த வழக்கிற்கான விசாரணை நடைபெறுகிறது என்ற விளக்கத்தை கேட்டும், விசாரனை தொடர்பான ஆவணங்களை வழங்க கோரியும் அமலாக்க பிரிவுக்கு கடிதம் எழுதியும், இதுவரை எந்த பதிலும் இல்லை என்பதால், அமலாக்கப்பிரிவின் சம்மனுக்கு தடை விதிக்க வேண்டும் என மனுவில் கோரியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர். மகாதேவன் மற்றும் எஸ்.ஆனந்தி அமர்வு, ஏற்கனவே குறியீடு செய்யப்படதா ஆவணங்களை வழங்க உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், விசாரணைக்கு ஆஜராக அனுப்பிய சம்மனுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. மேலும், மனுவுக்கு பதிலளிக்கும்படி அமலாக்கப் பிரிவுக்கு உத்தரவிட்டு, விசாரணையை நான்கு வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு
புதுக்கோட்டை மச்சுவாடி, சிட்கோ
VSSM டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தில்
1.கம்ப்யூட்டர் ஆபரேட்டர்,
3 ITC foods சேல்ஸ் மேன்கள்,
3 ITC சிகரெட், சேல்ஸ் மேன்கள்
உடனடி தேவை
தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
தொடர்புக்கு :
சையது அப்துல்லா 98654 01232,
சாதிக் பாஷா +91 7402-785370

## புதுக்கோட்டையில் சிறுமியை கடத்திச் சென்று வன்கொடுமை செய்தவருக்கு ஆயுள் தண்டனை

புதுக்கோட்டை , மே. 7:

புதுக்கோட்டை அருகே 16 வயது சிறுமியை கடத்தி சென்று பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் விதித்து புதுக்கோட்டை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

புதுக்கோட்டை கணேஷ் நகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட காந்திநகர் 8ம் வீதியை சேர்ந்தவர் சரண்குமார் 22 வயதான இவர் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் தேதி 16 வயதான சிறுமியை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி 5 பவுன் நகை மற்றும் பத்தாயிரம் ரூபாய் பணத்துடன் கடத்திச் சென்றதாக சிறுமியின் தந்தை கொடுத்த புகாரின் பேரில் சரண்குமார் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.



நேற்று மகிளா நீதிமன்றத்தில் இறுதி விசாரணை நடைபெற்றது. அதில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் குற்றவாளிக்கு ஆண்டுகள் சிறை தண்டனையும் 30,000 ரூபாய் அபராதமும் போக்சோ வழக்கில் ஆயுள் தண்டனையும் 30 ரூபாய் அபராதமும், மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்கவும் நீதிபதி சத்யா உத்தரவிட்டார். தீர்ப்புக்குப் பின்னர் குற்றவாளி சரண் குமார் திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்












| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,851 | Rs.5,250 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

## தமிழக முதல்வரை நேரில் சந்திக்க 9-ம் வகுப்பு மாணவன் கேரளாவிலிருந்து சென்னை வரை மிதிவண்டி பயணம்



தென்காசி, மே.7-

கேரளா மாநிலம் சங்கனாச்சேரியில் இருந்து சென்னை தலைமைச் செயலகம் வரை இருசக்கர மிதிவண்டியில் செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராஜு ,மாரியம்மாள், தம்பதியரின் மகனான இளவரசன், கேரளா மாநிலம் சங்கனாச்சேரியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஆவார்.

இவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்திக்க இருசக்கர மிதிவண்டியில் புறப்பட்டு சென்று கொண்டிருக்கிறார். செங்கோட்டை, தென்காசி, கடையநல்லூர், சொக்கம்பட்டி, வழியாக செல்லும்போது சந்தித்த நிகழ்வுகள் தேசத்தின் நலன் கருதியும், ஒற்றுமைக்காகவும், சுற்றுப்புற சூழல் இயற்கை வளங்களை பாதுகாத்திடவும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், பல கோரிக்கைகளை முன்வைத்து ஆயிரம் கிலோமீட்டர் சென்று தமிழக முதல்வரை சந்திக்க உள்ளார்.

சங்கனாச்சேரி அரசுப் பள்ளியில் பயிலும் மாணவன் இளவரசனை தமிழ்நாட்டில் உள்ள சொந்த ஊரில் உள்ளவர்கள் வரவேற்றனர். கரிவலம்வந்தநல்லூர் மாரிமுத்து, பாலமுருகன் விருதுநகர், ஆனந்த் ஸ்ரீவில்லிபுத்தூர் மல்லி, சிங்கிலிபட்டியில் வரும்போது கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் மணிகண்டன் ஆகியோர் வரவேற்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.






## பல்லக்கு விவகாரம்: சடங்கை விட சட்டமே முக்கியம் நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன்



மதுரை , மே.7-

காலம் மாறும் போது எல்லாரும் மாறித்தான் ஆக வேண்டும். மனிதரை மனிதர் சுமக்கும் அடிமைத்தன முறையும் காலத்திற்கு ஏற்றார் போல் மாற வேண்டும் என சு.வெங்கடேசன் எம்.பி. தெரிவித்தார்.

சந்நியாசி தர்மங்களை எல்லாம் மடாதிபதிகள் நிஜமாகவே பின்பற்றுகிறார்களா என கேள்வியெழுப்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மடத்தின் சடங்குகளைவிட சட்டமே மேலானது என்றும் அதற்கு மடாதிபதிகள் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நத்தம் புறம்போக்கு நிலம் மற்றும் கோவில் நிலங்களில் நீண்ட காலமாக குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கும் இயக்கம் நேற்று நடத்தப்பட்டது. இதில் பங்கேற்ற பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர், மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்துக்கு உட்பட்டு பட்டா வழங்க சாத்தியமுள்ள நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

பல்லக்கு விவகாரத்தில் மதுரை ஆதினத்தின் சர்ச்சை கருத்து குறித்த கேள்விக்கு பதிலளித்த சு.வெங்கடேசன், " "மடத்திற்கென பல சடங்குகள், சம்பிரதாயங்கள் இருக்கலாம்.

ஆனால், மடத்தின் சம்பிரதாயங்களை விட மேலானது அரசியல் சாசன சட்டம். அதற்கு தங்களை மடாதிபதிகள் உட்படுத்திக் கொள்ள வேண்டும். சன்யாசி தர்மப்படி, நடந்து தான் செல்ல வேண்டும், பிச்சை எடுத்து ஒரு வேளை தான் சாப்பிட வேண்டும், அதையும் சுவை இல்லாமல் தான் உண்ண வேண்டும். அந்த சன்யாசி தர்மங்களை எல்லாம் நிஜமாகவே மடாதிபதிகள் பின்பற்றுகிறார்களா?

காலம் மாறும் போது எல்லாரும் மாறித்தான் ஆக வேண்டும். மனிதரை மனிதர் சுமக்கும் அடிமைத்தன முறையும் காலத்திற்கு ஏற்றார் போல் மாறவேண்டும்.அதைதான் அரசு சொல்கிறது. அதில் சட்ட ஒழுங்கு பிரச்சனை இல்லை. பழமைகளை மீறி ஜனநாயகம் வெல்லும்" என்றார்.

## அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை புதிய சுண்ணாம்புக்கல் சுரங்கம்: பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டம்



அரியலூர், மே.7-

அரியலூர் அரசு சிமெண்ட் ஆலைக்கு புதிய சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைப்பது தொடர்பாக, பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கயர்லாபாத் கிராமத்தில் அமைந்துள்ள, தமிழ்நாடு அரசு சிமெண்ட் ஆலை மேம்பாட்டுக்காக, கல்லங்குறிச்சியில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் விரிவாக்கம் செய்வது தொடர்பாக, பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம், அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை சமுதாய கூடத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இத்திட்டம் செயல்படுத்தும் முறைகள் குறித்து, பொதுமக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் பொது மக்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, புதுடில்லியில் உள்ள மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சக அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப் படவுள்ளது.

இக்கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள், மாசுக்கட்டுபாடுகள் குறித்தும், கிராம இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது மற்றும் தங்களின் கோரிக்கைகள் குறித்தும், கருத்துக்களை பதிவு செய்தார்கள். பின்னர், இக்கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் கோரிக்கை மனு அளித்தனர். அனைத்து கோரிக்கைகளும் பரிசீலனை செய்யப்பட்டு, பொதுமக்களின் நலன் கருதி திட்டங்கள் செயல்படுத்தப்படும் என, மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, தெரிவித்தார்;.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) வெங்கடேசன், உதவிப்பொறியாளர் இளமதி, கோட்டாட்சியர் ஏழுமலை, வட்டாட்சியர் குமரய்யா அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை துணைப் பொது மேலாளர் ரவிச்சந்திரன், பி எல் எம் பாலச்சந்திரன், சுரங்க மேலாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட அரசு சிமெண்ட் ஆலை அலுவலர்கள், தேமுதிக மாவட்ட செயலாளர் ராம ஜெயவேல் சமூக ஆர்வலர் ராம சங்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் அமீனாபாத் வளர்மதி ஜெயராமன், கல்லங்குறிச்சி ஆர்த்தி சிவகுமார், கயர்லாபாத் சௌந்தர்ராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரவி, தொழிலாளர் முன்னேற்ற சங்க மாவட்ட கவுன்சில் தலைவர் மகேந்திரன், விவசாய சங்கத் தலைவர் செங்கமுத்து உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் தீயணைப்புத் துறை சார்பில் விழிப்புணர்வு செயல்முறை விளக்கம்



கள்ளக்குறிச்சி, மே,07_

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட தீ விபத்தின் காரணத்தினால் நேற்று தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் தீயணைப்பு துறையின் சார்பில் தீ விபத்து ஏற்பட்டால், விபத்திலிருந்து நோயாளிகளை காப்பாற்றுவது குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. அதனடிப்படையில்,

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தீயணைப்பு துறையின் சார்பில், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவ அலுவலர் நளினிபோஸ் முன்னிலையில், தீயணைப்பு துறை மாவட்ட உதவி அலுவலர் சிவக்குமார் தலைமையில், தீயணைப்பு நிலைய அலுவலர் சக்கரவர்த்தி, போக்குவரத்து அலுவலர் பூபாலன் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தீத்தடுப்பு மற்றும் விபத்திலிருந்து முதலுதவி செய்து காப்பாற்றுவது குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்பொழுது மருத்துவமனையில் உள்ள சமையல் கூடங்களில் சிலிண்டர்களை பாதுகாப்பான முறையில் கையாள்வது, தீ விபத்து ஏற்பட்டால் மருத்துவமனையில் உள்ள தீ தடுப்பு அடைப்பான்களை பயன்படுத்தி தற்காலிகமாக தீயை அணைப்பது குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன, மற்றும் தீவிபத்திலிருந்து நோயாளிகளை காப்பாற்றும் வழிமுறைகள் குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் பொழுது தீயணைப்பு வீரர்கள் பரந்தாமன், ரமேஷ், ஆனந்தவேல், பாலாஜி, ஞானவேல், பரசுராமன், ரகு, ராஜ்குமார், அருட்செல்வன், கண்ணன், பாண்டியன், மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு பட்டா வழங்ககோரி பல்வேறு இடங்களில் போராட்டம்



புதுக்கோட்டை, மே.7-

புறம்போக்குகளில் குடியிருந்துவரும் ஏழை மக்களுக்கு பட்டா வழங்கக்கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய மனுக்கொடுக்கும் போராட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்திலிதுந்து ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

அரசுக்கு பயன்பாடற்ற பல்வேறு வகைப் புறம்போக்குகளில் வசிப்பவர்களை நீதிமன்ற உத்தரவைக் காட்டி அப்புறப்படுத்துவதை கைவிட வேண்டும். அத்தகைய இடங்களை உரிய வகைமாற்றம் செய்துபட்டா வழங்க வேண்டும். வாடகை வீட்டில் குடியிருந்து வரும் ஏழைகளுக்கு வீடும், வீட்டுமனைப் பட்டாவும் வழங்க வேண்டும். நகர்புற வீட்டுவசதித் திட்டத்தில் ஏழை மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் தாலுகா அலுவலகங்களில் மனுக்கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. அதனொரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்னர்.

புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற போராட்டத்திற்கு புதுக்கோட்டை ஒன்றியச் செயலாளர் டி.லட்சாதிபதி, நகரச் செயலாளர் ஆர். சோலையப்பன் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சி.அன்புமணவாளன், ஜி.நாகராஜன், எஸ். ஜனார்த்தனன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் க.முகமதலிஜின்னா, சி.மாரிக்கண்ணு, அ.மணவாளன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் வீட்டுமனைப் பட்டாவும் வீடும் கேட்டு மனு அளித்தனர்.

இதேபோல கந்தர்வகோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, ஆவுடையார்கோவில், இலுப்பூர் அன்னவாசல் ஆகிய இடங்களில் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு பட்டா வழங்ககோரி மனு கொடுத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



▶ புதுக்கோட்டை மாவட்டம் காரையூர் பிடாரி அம்மன் கோவிலில் குதிரை எடுப்பு திருவிழா நேற்று நடைபெற்றது.இதில் அப்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் விரதமிருந்து குதிரை சிலை,மதலை போன்ற சிலைகளை தலையில் சுமந்து கொண்டு காரையூர் பிடாரி அம்மன் கோவிலில் இருந்து முக்கிய வீதிகளின் வழியாக வைரப்பெருமாள் கோவிலில் வைத்து தரிசனம் செய்தனர்.பின்னர் பிடாரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## திண்டுக்கல்லில் சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்



திண்டுக்கல், மே.7-

திண்டுக்கலில் தனியார் திருமண மஹாலில் 33வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு போக்குவரத்து காவல்துறை சார்பில் மருத்துவ முகாம் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன் முகாமினை தொடங்கி வைத்து பரிசோதனை செய்தார்.

முகாமில் கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கண்ணில் நீர் வடிதல் உள்ளிட்ட கண் சம்பந்தப்பட்ட பரிசோதனைகளும் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனை நடைபெற்றது. வாகன ஓட்டுநர்கள் கண் பார்வை மற்றும் உடல்நிலை சரியாக இருந்தால் மட்டுமே வாகனங்களை இயக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும் ஓட்டுநர்களுக்கு கண் பார்வை மற்றும் சர்க்கரை நோய், இலவச பரிசோதனைகள் செய்யப்பட்டது. குறைபாடு உள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் மற்றும் மருந்து மாத்திரைகள் சலுகை விலையில் வழங்குவதாக தெரிவித்தனர். 500க்கும் மேற்பட்ட டாக்ஸி, ஆட்டோ ஓட்டுநர்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர்.

### குன்றாண்டார்கோவில் பகுதியில்

## இல்லம் தேடி கல்வி மையங்களை வட்டாரக் கல்வி அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



புதுக்கோட்டை,மே.7-

குன்றாண்டார்கோவில் ஒன்றியம், கன்னாங்குடி குடியிருப்புக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் இல்லம் தேடி கல்வி மையங்களை வட்டாரக்கல்வி அலுவலர் பர்வின்பானு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் மாணவர்களிடம் கேள்விகள் கேட்டு சரியாக பதில் அளித்த மாணவர்களை பாராட்டினார்.

ஆய்வின் பொழுது ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சவரிராஜ், கன்னாங்குடி பள்ளி தலைமையாசிரியர் நேசமணி, தன்னார்வலர்கள் ஜாஸ்மின், ரேவதி போன்றோர் உடன் இருந்தனர்.


# திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீன குருபூஜை விழாவில் – நூல்வெளியீடு



நாகப்பட்டினம்,மே.7–
திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீன திருமடத்தில் நடைபெற்ற மகாகுருபூஜை விழாவில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. வேளாக்குறிச்சி ஆதீன முனிபுங்கவர்களில் ஒருவரான ஸ்ரீகாழி மறைஞானதேசிகர் அருளிச்செய்த சிவபுண்ணியத் தெளிவு நூல்வேளாக்குறிச்சிஆதீன வெளியீடாக,வேளாக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் நூலை வெளியிட்டார்.

இதில் தருமை ஆதீனம் ராஜன்கட்டளை ஸ்ரீமத் மாணிக்கவாசகதம்பிரான் சுவாமிகள், சூரியானார் கோவில் ஆதீனம் ஸ்ரீமத் சிவாக்கிரயோகி சுவாமிகள் ஆகியோர் நூலை பெற்றுக்கொண்டனர். முன்னதாக முனைவர் ராஜேஸ்வரன்,புலவர் விவேகானந்தன் ஆகியோரின்உரையரங்கம் நடைபெற்றது.

# ஸ்ரீ வீரராகவர் கோயில் பிரம்மோற்சவம் தொடக்கம்



திருவள்ளூர், மே 7:
திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ பெருமாள் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவம், நேற்று (வெள்ளிக்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்கியது

108 வைணவத் தலங்களில் ஒன்றான திருவள்ளூர் வீரராகவ பெருமாள் கோயிலில், சித்திரை மாத பிரம்மோற்சவம் ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா தொற்று காரணமாக பக்தர்கள் அனுமதியின்றி கோவில் வளாகத்திற்குள்ளேயே உலா வரும் நிகழ்வு நடைபெற்றது

இந்த நிலையில் நிகழாண்டில் சித்திரை பிரம்மோற்சவம் வெள்ளிக்கிழமை (மே 6) அதிகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து பூதேவி, ஸ்ரீதேவி சமேதராக உற்சவர் வீரராகவ பெருமாள் தங்க சப்பரத்தில் காலை 6 மணிக்கு திருவீதி உலா வர உள்ளார். மாலையில் அலங்கரிக்கப் பட்ட சிம்ம வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

பிரம்மோற்சவம் 15–ஆம் தேதி வரை, 10 நாட்கள் நடைபெற உள்ளது.நாள்தோறும் உற்சவமூர்த்திகள் பல்வேறு வாகனங்களில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

தேர் வர்ணம் பூசி தயார்....! திருவள்ளூர் வீரராகவர் கோவிலில், கடந்த, 2019–இல் உற்சவர் வீரராகவர் பெரிய தேரில் எழுந்தருளி உலா வந்தார்.

அதையடுத்து கடந்த, 2020 மற்றும் 2021 இல் கொரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக,தேரோட்டம் நடைபெறவில்லை. எனவே நிகழாண்டில் கொரோனா தொற்று குறைந்த நிலையில், 2 ஆண்டுகளுக்குப் பின், வரும் 12ஆம் தேதி தேரோட்டம் வெகு விமரிசையாக நடக்க உள்ளது. இதற்காக பெரிய தேர், சீரமைக்கப்பட்டு, வர்ணம்பூசி,தயார்நிலையில் உள்ளது.

பிரம்மோற்சவத்துக்கான ஏற்பாடுகளை கோவில் கௌரவ ஏஜென்ட் சம்பத் செய்துள்ளனர்

# குத்தாலம் அருகே தொழுதாலங்குடி பொன்னியம்மன் கோவில் 71–ம் ஆண்டு சித்திரை பால்குட திருவிழா



குத்தாலம்,மே.07:
மயிலாடுதுறை மாவட்டம்,குத்தாலம் தாலுக்கா தொழுதாலங்குடி கிராமத்தில் பழமை வாய்ந்த பொன்னியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இந்த கோவிலின் 71–ம் ஆண்டு சித்திரை பால்குட திருவிழா கடந்த 2–ஆம் தேதி பந்தக்கால் முகூர்த்தம் செய்யப்பட்டு தொடங்கியது.

விழாவின் முக்கிய நிகழ்வான நேற்று காவிரிக் கரையிலிருந்து பால் குடங்கள் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக கோவிலை வந்தடைந்தது. பின்னர் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பால் குடங்கள் எடுத்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி சாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர், அமிர்தலிங்கம், வைத்தியநாதன், கோவிந்தன் ,சுந்தரமூர்த்தி மற்றும் கிராமவாசிகள், பொன்னியம்மன் நற்பணி மன்றத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

மேலும்ராமபிரானுக்கு அபிஷேக ஆராதனை அன்னதானம் வழங்கும் நிகழ்வும், இரவு வீதி உலா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மயிலாடுதுறையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்து தமிழர் கட்சி நிறுவன தலைவர் ராம ரவிக்குமார் குற்றச்சாட்டு



மயிலாடுதுறை ,மே.07:
மயிலாடுதுறையில் பட்டினபிரவேசம் யாத்திரை பாதுகாப்பு இயக்கம் சார்பில் அனைத்து இந்து அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்து தமிழர் கட்சி நிறுவனத் தலைவர் ராம ரவிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் இந்து மக்கள் கட்சி மற்றும் இந்து மகா சபா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் பங்கேற்றன. தொடர்ந்து பட்டினப்பிரவேசம் நிகழ்ச்சிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க கோரி வருகின்ற 9 ஆம் தேதி அனைத்து இந்து அமைப்பினர் ஒன்றிணைத்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாக தீர்மானம் நிறைவேற்றினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த இந்து தமிழர் கட்சி நிறுவன தலைவர் ராம ரவிக்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது :–

இந்து மதத்திற்கு நம்பிக்கையாக இருக்கக்கூடிய கோயில்களை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என நினைக்கும் திமுக அரசின் போக்கை கைவிட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

உலகம் முழுவதும் பட்டின பிரவேசம் நிகழ்ச்சிக்கு தடை விதித்து அதன் முக்கியத்துவத்தை தெரிய வைத்த வருவாய் கோட்டாட்சியருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் , மேலும் அவர் சங்கியாக இருப்பார் என நினைப்பதாகவும் விமர்சித்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு தருமையாதீனம் நிலம் வழங்கியதை மறந்து நன்றி கெட்ட அரசாக திமுக அரசு செயல்படுவதாக குற்றம்சாட்டினார்.

ஆன்மீக நிகழ்ச்சிக்கு வருகை தரும் ஆளுநருக்கு எதிராக கருப்புக் கொடி போராட்டம் செய்வதற்கு அனுமதி தரும் காவல்துறை ஜனநாயக முறையில் நடந்து கொள்ள வேண்டும் எனவும் , தமிழக முதல்வரை யாரோ ஒருவர் தவறாக வழிநடத்துகிறார் எனவும் தெரிவித்தார்.

திமுகவிற்கு ஆதரவாக பல்லக்கு துக்ககூடிய நிர்வாகிகளுக்கு வாரியத்தில் பதவி அளிக்கபடுவதாகும் , தொடர்ந்து மதங்களுக்கு எதிராக முதல்வர் ஸ்டாலின் செயல்பட்டால் தேர் விபத்து சம்பவங்கள் ஆளும் அரசுக்கு நல்லது இல்லை என்றும் , தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆயுள் நன்றாக இருக்க நாங்கள் பிரார்த்திக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே வருகின்ற 9ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் போராட்டம் நடத்துவதற்கு காவல் நிலையத்தில் அனுமதி கோரி இருந்த நிலையில் மயிலாடுதுறை மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் வசந்த ராஜ் அனுமதி மறுத்து உத்தரவிட்டுள்ளார்.






▶ புதுக்கோட்டைநகர் மன்றத்தில் தமிழ் நாடு குத்துச் சண்டை கழகம் நடத்தும் மாநில அளவிலான ஆண், பெண் சப்ஜுனியர் குத்துசண்டைபோட்டி 06,07,08. மூன்று நாட்கள் நடக்கின்றது. போட்டி தொடக்கத்தில் பெண்கள் ஆண்கள்,கலந்துகொண்ட குத்துசண்டை போட்டி தொடங்கியது மாநிலம் முழுவதிலிருந்தும் குத்துசண்டைவீரர்கள் வருகை தந்து போட்டியில் கலந்து கொண்டுள்ளனர், இந்நிகழ்வை தமிழ் நாடு குத்துச் சண்டை கழகநிர்வாகிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.



▶ திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்,தண்ணீர் குளம் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் லலிதா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்



▶ திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் பூதூர் ஊராட்சியில் மே 1 தினத்தன்று கிராமசபை கூட்டம் பூதூர் ஆரம்பப்பள்ளி வளாகத்தில் ஊராட்சி துணைத்தலைவர் என். தாட்சாயணி நாகேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலர் குலசேகரன்,8வது வார்டு ஒன்றியக் கவுன்சிலர் கே. பாஸ்கரன் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் வி.பிரவீன், சி.சீனிவாசன், ஜி.சுஜாதா கே.ஜானகி, கே.வரலட்சுமி, எஸ்.கௌரி, ஜி.சூர்யாபிரகாஷ் ஜி.சரவணன் மற்றும் ஊராட்சி செயலர் ஞானமூர்த்தி கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



▶ பாட்டாளி மக்கள் கட்சி யின் கடலூர் மாவட்ட பொதுக்குழு கூட்டம் அன்புமணி ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.



▶ கடலூர் மாநகரில் மாற்று கட்சியிலிருந்து விலகி 500 மேற்பட்டோர் கழக தேர்தல் பணிகுழு செயலாளர் இள.புகழேந்தி மற்றும் மாநகர செயலாளர் கே.எஸ். ராஜா முன்னிலையில் கடலூர் மாநகர தி.மு.க.வில் தங்களை இணைத்து கொண்டனர்.



▶ மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 18 வயதிற்குட்பட்டோருக்கான சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா நேற்று தொடங்கி வைத்ததுப் பார்வையிட்டார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் சொ.முருகதாஸ், கோ.அர. நரேந்திரன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) இராமசந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலர் சீனிசான் ஆகியோர் உள்ளனர்.

# ஆத்துப்பாக்கம் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீசெல்லியம்மன் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம்





ஊத்துக்கோட்டை, மே7–
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் கிராமத்தின்நுழைவாயலில் ஏரிக்கரையின் மீது கிராம தேவதையான அருள்மிகு ஸ்ரீசெல்லியம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவில் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது ஆகும். இந்நிலையில்,இக்கோவில் சிதிலமடைந்து காணப்பட்டது.எனவே, கிராம பொதுமக்கள் மற்றும் விழாக்குழுவினர் இக்கோவிலை புதுப்பித்து நேற்று காலை 10.15 மணி அளவில் மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதனை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை மங்கள இசையுடன் பந்தக்கால் நடும் நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது. நேற்று முன்தினம் கணபதி பூஜை,கோ–பூஜை,தன பூஜை, நவகிரக பூஜை,லட்சுமி குபேர பூஜை மற்றும் ஹோமங்கள் மஹா பூர்ணாஹுதி உள்ளிட்டவை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை சிறப்பு பூஜைகள் ஹோமங்கள் நடைபெற்றது.

நேற்று காலை 5–ம் கால பூஜைகள் நடைபெற்றது. இதன் பின்னர்,மகா பூர்ணாஹுதி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து சுண்ணாம்புகுளம் வெங்கட்ஐயர்தலைமையில் 15 பேர் கொண்ட புரோகிதர்கள் புனிதநீர் அடங்கிய கலசங்களை ஊர்வலமாக கொண்டு வந்தனர். பின்னர்,கோபுர கலசங்கள், மூலவர், பிரகார மூர்த்திகளுக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், ஆத்துப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் நிர்மலா ஞானமூர்த்தி,ஒன்றிய கவுன்சிலர் புஷ்பா முருகன் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு சுவாமி தரிசனம்செய்தனர்.பின்னர், கோவில் வளாகத்தில் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கானஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாகசெய்திருந்தனர்.

# பள்ளிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு அகற்றம்



தி.மலை ,மே.07:
திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அடுத்த வீரணம் ஊராட்சியில் மாரியம்மன் கோவில் அருகே ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குச் சொந்தமான 3 சென்ட் இடத்தை சிலர் ஆக்கிரமித்து சுற்றுச்சுவர் மற்றும் கழிவறை கட்டி உள்ளனர்.

இதனை அகற்ற வேண்டுமென ஊர் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று நேற்று தாசில்தார் பரிமளா ,வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்மலா, மகாதேவன் ஆகியோர் முன்னிலையில் சர்வேயர்கள் தரணிவாசன்,தமிழரசன், சாத்தனூர் அணை சப்–இன்ஸ்பெக்டர் சிவாஜி ஆகியோர் அளவீடு செய்து பொக்லைன் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றினர்.

அப்போது துணை தாசில்தார் செந்தில்குமார், கலைச்செல்வி,வருவாய் ஆய்வாளர் ஜெயக்குமார், கிராம நிர்வாக அலுவலர் சங்கீதா,சிவலிங்கம், முத்து ஆகியோர் உடனிருந்தனர்.

# விவேகானந்தா பள்ளியில் யுகேஜி மழலையர்களுக்கு பட்டமளிப்பு விழா நகைச்சுவை நடிகர் வையாபுரி கலந்துகொண்டு வழங்கினார்



செங்கல்பட்டு ,மே.07:
செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் விவேகானந்தா வித்யாலயா சிபிஎஸ்சி பள்ளி மற்றும் விவேகானந்தா வித்யாலயா மெட்ரிகுலேஷன் ஆகிய பள்ளிகளில் படிக்கும் யுகேஜி மழலையர்களுக்கான பட்டமளிப்பு விழா பள்ளி கலையரங்கில் நேற்று கோலாகலமாக நடந்தது.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி பள்ளி கட்டிடம், யுகேஜி வகுப்பறைகள், கலையரங்கம் ஆகியவை வண்ண கொடிகளாலும் தோரணங்களாலும் பலுன்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி தாளாளர் லோகராஜ் தலைமை தாங்கினார். பள்ளி இயக்குனர் மங்கையர்கரசி முன்னிலை வகித்தார் மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர் திலகவதி அனைவரையும் வரவேற்றார் சிறப்பு விருந்தினராக திரைப்பட நகைச்சுவை நடிகர் வையாபுரிகலந்துகொண்டு சிறப்புரையாற்றி 108 மழலைகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து மெட்ரிகுலேஷன் பள்ளி மற்றும் சிபிஎஸ்சி பள்ளி மாணவர்களின் கிராமிய நடனம், பரதநாட்டியம், கவிதை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர் ஆசிரியைகளும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் இறுதியாக சிபிஎஸ்சி பள்ளி முதல்வர் சியாமளா அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஒன்று முதல் 9 ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு மே 14 முதல் ஜூன் 12 வரை கோடை விடுமுறை

சென்னை, மே.7–
ஜூன் 23 ஆம் தேதி பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்று பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

நடப்பாண்டில் பள்ளி பொதுத் தேர்வுகள் இந்த மாத இறுதி வரை நடைபெறுகின்றன. இதனால் இந்த பள்ளி கோடை விடுமுறை நாட்கள் தள்ளிப் போவதுடன் குறைந்துள்ளது.

இந்நிலையில், தமிழக பள்ளிக் கல்வித்துறை இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில் ஒன்று முதல் 9 ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு வரும் மே 14 ஆம் தேதி முதல் ஜூன் 12 ஆம் தேதி வரை கோடை விடுமுறை விடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடை விடுமுறைக்குப் பின்னர் ஜூன் 13ம் தேதி மீண்டும் பள்ளிகள் திறக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜூன் 23 ஆம் தேதி பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்றும், பிளஸ் 1 வகுப்புகளுக்கு ஜூன் 24 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் எனவும் பள்ளிக் கல்வித்துறை, தெரிவித்துள்ளது.



# புதுக்கோட்டை தண்டாயுதபாணி சுவாமி கோயிலில், சஷ்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது

புதுக்கோட்டை,மே.7-

புதுக்கோட்டைமேல ராஜ வீதிலுள்ள அருள் மிகு தண்டாயுத பாணி சுவாமி கோயிலில் சஷ்டியையொட்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சஷ்டி யையொட்டி, காலையில் தண்டாயுதபாணி சுவாமிக்கும், விநாயகருக்கும் பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட



பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது.

மாலையில் தண்டாயுதபாணி சுவாமி சந்தனக்காப்பு மலர் அலங்காரத்திலும், விநாயகர் வெள்ளிக் கவச அலங்காரத்திலும் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் வந்திருந்து வழிபட்டனர். ஏற்பாடுகளைபாலு அய்யர் மற்றும்கோயில்ஊழியர்கள் செய்திருந்தனர்.









மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோவில் பாப்பா குடி ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில் ஊராட்சி மன்றத் தலைவர் சரவணன் தலைமை தாங்கினார், துணை தலைவர் சோனை மற்றும் உதவியாளர் மகேஷ்குமார், மேலும் சுகாதாரத்துறை அதிகாரிகள், மருத்துவத்துறை, தூய்மை பணியாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் நடைபெற்ற வடக்கு மாவட்ட திமுக 15வது உட்கட்சி தேர்தல்

தென்காசி, மே.7-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக 15வது உட்கட்சி தேர்தல் கடையநல்லூர் குமரபுரம் துர்கா மஹாலில் வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. தலைமைக் கழக பிரதிநிதியும் மாநில நெசவாளர் அணி பொறுப்பாளருமான, சச்சிதானந்தா முன்னிலையில் பேரூர், நகர,வார்டுகளுக்குதேர்தல் நடைபெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் சிவகிரிசெண்பகவிநாயகம் வார்டு செயலாளராக



சான்றிதழ் பெற்றுக் கொண்டார், மேலும் புளியங்குடி திமுக நகர செயலாளராகபுளியங்குடி நகர்மன்றதுணைத்தலைவர் அந்தோணிசாமி தேர்வு செய்யப்பட்டார்.மாவட்டச் செயலாளர்செல்லத்துரை, தேர்தல் அதிகாரி சச்சிதானந்தத்திடம் வாழ்த்து பெற்று புளியங்குடியில் தேசிய தலைவர்களான மகாத்மா காந்தி சிலை, பெருந்தலைவர் காமராஜர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். நகர செயலாளராக பொறுப்பேற்ற அந்தோணிசாமிக்கு திமுக நகர கழக சார்பாக திமுக தொண்டர்களும், பொது மக்களும் வாழ்த்து தெரிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

# புரோட்டா பார்சலில் பாம்புத் தோல் தமிழ்நாட்டை தொடர்ந்து கேரளாவிலும் ஹோட்டல்களுக்கு பூட்டு

திருவனந்தபுரம்,மே.7-

புரோட்டா, பிரியாணி சாப்பிட்டு சிலர் தமிழ்நாட்டில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தற்போது, கேரளாவில், புரோட்டா பார்சலில் பாம்பு தோல் கிடந்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதால் வேகமாக பரவி வருகிறது.

கேரளாவில், காசர்கோடு மாவட்டத்தில் ஷவர்மா சாப்பிட்ட மாணவி ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து அந்த ஓட்டலுக்கு சீல் வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து தமிழகத்தில் ஷவர்மா தயாரிக்கும் அனைத்து ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில் உணவு பாதுகாப்புத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். தஞ்சாவூர் மாவட்டம்ஒரத்தநாட்டில் ஷவர்மா சாப்பிட்ட மருத்துவ மாணவர்கள் மயக்கமடைந்து மருத்துவமனையில்



சிகிச்சை பெற்று வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில்பிரியாணி சாப்பிட்ட 40க்கும் மேற்பட்டவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனிடையே கேரளாவின் நெடுமங்காட்டை அடுத்த பூவத்தூர் பகுதியை சேர்ந்த பிரியா, அதே பகுதியில் உள்ள ஓட்டலில் புரோட்டா பார்சல் வாங்கிகொண்டு வீட்டிற்கு சென்றார். வீட்டில்சென்று பார்சலை பிரித்து பார்த்த போது, அதில் பாம்பு தோல் இருந்தது தெரியவந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர், இது குறித்து நெடுமங்காடு போலீசார் மற்றும் உணவு பாதுகாப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார். பிரியா வீட்டிற்கு சென்ற அதிகாரிகள் உணவை வாங்கி சோதனை செய்தனர். மேலும், சம்பந்தப்பட்ட ஓட்டலுக்கும் சீல் வைத்தனர். புரோட்டா பார்சலில் பாம்புதோல் இருந்தபடத்தைசிலர்படம் பிடித்து வெளியிட அது வைரலாகபரவி வருகிறது. பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்திய நாட்களாக தமிழ் நாட்டை தொடர்ந்துகேரளாவிலும் ஹோட்டல் உணவுகளை பொதுமக்கள் சாப்பிட அஞ்ச தொடங்கியுள்ளனர். விசாரணைக்குச் செல்லும் அதிகாரிகளோ தடாலடியாக எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற நோக்கிலேயே சீல் வைத்து விடுகின்றனர் இதனால் தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் ஹோட்டல் உரிமையாளர்களும் என்ன செய்வதென்று அறியாமல் தவித்து வருகின்றனர்.

ஜெய்ப்பூரில் விநோத சம்பவம்

# தடயங்களை குரங்கு எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக கோர்ட்டில் தெரிவித்த போலீசார்



ஜெய்ப்பூர், மே.7-

ராஜஸ்தானில் கோர்ட்டில் சமர்பிப்பதற்காக போலீசார் சேகரித்து வைத்திருந்த தடயங்களை குரங்கு எடுத்து சென்ற விநோத சம்பவம் அரங்கேறியுள்ளது.

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள சந்த்வாஜி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சஷிகாந்த் சர்மா என்ற நபர் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளார்.

இவரது மரணம் குறித்து உரிய விசாரணை நடத்தக்கோரி அவரது குடும்பத்தினர் டெல்லி-ஜெய்ப்பூர் நெடுஞ்சாலையை மறித்து முற்றுகையிட்டுள்ளனர்.

போராட்டம் நடைபெற்ற ஐந்து நாட்களுக்குப்பிறகுராகுல் மற்றும் மோகன்லால் கண்டேரா ஆகிய இருவரை போலீஸார் கைது செய்தனர். இருவரும் சந்த்வாஜியில் பகுதியை சேர்ந்தவர்கள். இந்த கொலை சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை மாவட்ட கூடுதல் கோர்ட்டில் பல கட்டங்களாக நடைபெற்று வந்தது.

இறுதி விசாரணையில் கொலைக்குற்றத்திற்கான தடயங்களை சமர்பிக்க போலீசாரை கோர்ட்டு கோரியுள்ளது.

இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பாக சமீபத்தில் போலீசார் கோர்ட்டில் அளித்த பதிலை கேட்ட நீதிபதிகள் அதிர்ச்சியடைந்தனர்.

அதாவது இந்த கொலையில் தொடர்புடைய கத்தி உள்ளிட்ட 15 தடயங்கள் கொண்ட பையை போலீசார் காவல் நிலையத்திற்கு வெளியே உள்ள மரத்தடியில் ஒருமுறை வைத்திருந்ததாகவும் ஆனால் அந்த பையை குரங்கு ஒன்று எடுத்துச் சென்றுஓடிவிட்டதாகவும் எழுத்துப் பூர்வமாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

போலீசாரின் இந்த பதிலை கேட்டு ஆத்திரமடைந்த நீதிபதிகள் சம்பந்தப்பட்ட போலீசாருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

இதற்கு பதிலளித்த காவல்துறை, சம்பந்தப்பட்ட போலீஸ் ஓய்வு பெற்ற சில வருடங்களில் உயிர் இழந்துவிட்டார் என தெரிவித்துள்ளனர்.



தென்காசி மாவட்டம், ஜமீன் சொக்கம்பட்டியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அருள்மிகு சந்தன மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு காப்புக்கட்டுதலுடன் நிகழ்ச்சி தொடங்கி 15 நாட்கள் விரதமிருந்து அருள்மிகு ஸ்ரீ சந்தன மாரியம்மன் திருக்கோவிலில் பூக்குழி திருவிழா நடைபெற உள்ளது. 4. 5. 2022 அன்று 5 ஆயிரம் பேருக்கு அன்னதானமும் அதைத்தொடர்ந்து சமுதாய கொடி ஏற்றுதலும், இளைஞர் அணியினர் 108 திருவிளக்கு பூஜையும் நடத்தினர். நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு நையாண்டி மேளம், டோ லாக் நடனத்தோடு செண்டா மேளம் முழங்க தீர்த்த குடம் மற்றும் 500க்கும் மேற்பட்ட பால்குடம் ஊர்வலமாக சென்று அம்மனுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இரவு கன்னியாகுமரி பரமேஸ்வரியின் ரவி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும், தஞ்சை புகழ் கரகாட்டம் நடைபெற்றது. இரவு சாம கால பூஜையும் ஸ்ரீ சந்தன மாரியம்மன் சப்பர வீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மேலும் விழா கமிட்டியர் முன்னிலையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

# ரயில் விபத்தில் இறந்த புதுக்கோட்டை தலைமை காவலர் குடும்பத்திற்கு 30 லட்சம் வழங்கப்பட்டது

புதுக்கோட்டை, மே.7-

புதுக்கோட்டை மாவட்டகாவல்துறையில் பணிபுரிந்த தலைமைகாவலர் கண்ணன் இரயிலில் அடிப்பட்டு இறந்தமைக்காக விபத்து காப்பீட்டுதிட்டத்தின் மூலம் பாரத ஸ்டேட் வங்கியின் மேலாளர் ரூ,30,00,000- ஐ அவரது குடும்பத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

தமிழக காவல்துறையில் கடந்த 1997-ம் ஆண்டுஇரண்டாம் நிலை காவலராகபணிக்குசேர்ந்து ,இலுப்பூர்காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்துவந்த கண்ணன் (49) என்பவர் கடந்த 14.09.2021-ம் தேதிகாலை செல்போனில் பேசிக் கொண்டு வெள்ளாற்று பாலம் அருகில் உள்ள (நமணசமுத்திரம் செல்லும்)



தண்டவாளத்தில் நடந்து செல்லும் போது எதிர்பாராத விதமாக காரைக்குடி வழி திருச்சிராப்பள்ளி வரை செல்லும் இரயிலில் அடிபட்டு சம்பவயிடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த சூழ்நிலையில் இவர் பாரத ஸ்டேட் வங்கியில் விபத்து காப்பீட்டு திட்டத்தில் சம்பள கணக்குவைத்திருந்ததன் பயனாக அதைகண்டறிந்த மாவட்டகாவல் கண்காணிப்பாளர் நிஷா பார்த்திபன் சீறியமுயற்சியால் புதுக்கோட்டை பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை மேலாளர் செல்வராஜுமற்றும் புதுக்கோட்டை பாரத ஸ்டேட் வங்கியின் துணைமேலாளர் சு.சத்தியபிரியா ஆகியோரின் மூலம் தலைமைகாவலர் கண்ணன் குடும்பத்திற்கு கிடைக்கவேண்டிய ரூ. 30,00,000 (ரூபாய். முப்பது இலட்சம்) காசோலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா பார்த்திபனால் தலைமைகாவலரின் மனைவி மு.லெட்சுமியிடம் நேற்று மாவட்டகாவல் அலுவலகத்தில் வைத்துவழங்கப்பட்டது.

# திண்டுக்கல்லில் புறம்போக்கு நிலத்தில் வாழும் மக்களை வெளியேற்றும் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது

திண்டுக்கல், மே.7-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்புஇந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பில் அக்கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம் தலைமையில் ஆர்ப்பாட்டம் மற்றும் மனு கொடுக்கும் இயக்கம் நடைபெற்றது.

பல்வகை புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் மக்களுக்கு வகை மாற்றம் செய்து பட்டா வழங்க வேண்டும். வீடற்ற தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு குடி மனை பட்டா வழங்க வேண்டும். வழங்கப்பட்ட



பட்டாக்களை கிராம கணக்குகளில் ஏற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேலும் நீர்நிலை மற்றும் கோயில் நிலங்களில் வசித்து வரும் பொதுமக்களை வெளியேற்றும் நீதிமன்ற உத்தரவுக்குஎதிராகதமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என மனு கொடுக்கும் இயக்கம் நடைபெற்றது. இதில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் இருந்து சுமார் 500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு தங்கள் கோரிக்கைகள் குறித்து கோஷங்கள் எழுப்பி மனு வழங்கும் இயக்கத்தில் கலந்துகொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

# மதநல்லிணக்க ஊராட்சியாக ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த போகலூர் தேர்வு

ராமநாதபுரம் , மே.7-

எங்கள் கிராமத்தை மதநல்லிணக்க கிராமமாக தேர்வு செய்து காசோலை வழங்கிய தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு நன்றி என ஊராட்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா போகலூர் ஒன்றியம் மதநல்லிணக்க ஊராட்சியாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான 10 லட்சம் காசோலை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

போகலூர் ஒன்றியம் அனைத்து சமுதாய மக்களும் பாகுபாடு இன்றியும் பிரச்சனைகள் இன்றியும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். அனைவரும் சமம் என்ற நோக்கத்தோடு போகலூர் கிராமத்தில் மத நல்லிணக்கத்தோடு கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் என அனைவரும் சாதி மதம் கடந்து ஒற்றுமையுடனும் எந்த மதத்தில் எந்த திருவிழா நடந்தாலும் அனைவரும் ஒன்றுகூடி செல்லுகின்றனர்.




கோயில் திருவிழாக்களில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என அனைவரும் பாகுபாடின்றி கலந்து கொள்வார்கள்.

இந்த பகுதியில் பிரதான தொழிலாக விவசாயம் செய்து வருகின்றார்கள். இவர்கள் பருத்தி , நெல் , மிளகாய் ஆகியவற்றை சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களின் ஒருமைப்பாட்டை பாராட்டும் வகையில் தமிழக அரசு மத நல்லிணக்க கிராமமாக போகலூர் ஒன்றியத்தைச் தேர்வு செய்து அதற்கான காசோலை ஊராட்சி ஒன்றிய தலைவர் கலையரசி பாலசுப்ரமணி அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் சங்கர்லால் குமவாத் வழங்கினார்.

மேலும் இதுகுறித்து ஊராட்சி மன்ற தலைவர் கூறுகையில், எங்கள் கிராமத்தை மதநல்லிணக்க கிராமமாக தேர்வு செய்து காசோலை வழங்கிய தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு நன்றி தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து இந்த 10 லட்சம் ரூபாயை வைத்து போகலூர் கிராமத்தில் உள்ள குடிநீர் குழாய் சரி செய்தல், ரோடு சரி செய்தல், தெருவிளக்கு உள்ளிட்ட அனைத்து அடிப்படை தேவைகளுக்கு இந்த ரூபாய் செலவு செய்யப்படும் என்று கூறினார்.

# பள்ளிகளில் உள்ள சாதி பெயர் அடையாளங்களை நீக்க சட்டப்பேரவையில் விசிக கோரிக்கை

சென்னை , மே.7-

தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் உள்ள சாதி பெயர் அடையாளங்களை நீக்கிட அரசு உறுதி செய்ய வேண்டும் என்று சட்டப்பேரவையில் விசிக சட்டமன்ற உறுப்பினர் பணிகள் பாபு கோரிக்கை வைத்தார். சட்டப்பேரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கை விவாதம் மீது செய்யூர் தொகுதி விடுதலை சிறுத்தைகள்கட்சிசட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு பேசினார். அப்போதுஅவர், ஓராண்டைநிறைவுசெய்யும் திராவிடமாடல்ஆட்சியை விடுதலை சிறுத்தைகள் கட்சிமனதாரவரவேற்கிறது

தொல்திருமாவளவன் கோரிக்கைவிடுத்த12மணி நேரத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்த முதல்வருக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இமானுவேல் சேகரனுக்கு மணிமண்டபம் அமைத்து அதனை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும். தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் உள்ள சாதி பெயர் அடையாளங்களை நீக்கிட அரசு உறுதி செய்ய வேண்டும். தமிழகம் முழுவதும் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல பள்ளியின் பெயரை சமூக நல பள்ளி என பெயர் மாற்றம் செய்ய வேண்டும். ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதிகளை மிகச் சிறந்த கட்டமைப்பு



கொண்டதாக மாற்ற வேண்டும்.

மாணாக்கருக்கு உணவுக்கு என ஒதுக்கப்படும் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்றுஇருப்பதை3ஆயிரம் ரூபாயாகஉயர்த்தி வழங்க வேண்டும். நீதித்துறையில் பட்டியல் வகுப்பினருக்கு, பழங்குடி இனத்தவருக்கு உரிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வழிவகை காண வேண்டும், அரசு வழக்கறிஞர் பணி நியமனங்களில்போதுமான பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர், பதிவாளர் உள்ளிட்ட பொறுப்புகளுக்கு ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கிட வேண்டும். கிறிஸ்தவம் தழுவும் ஆதிதிராவிடமக்கள்மத்திய அரசின் அரசாணை மூலம் இட ஒதுக்கீடு உரிமையை பறிகொடுத்துதவிக்கின்றனர், அம்மக்கள் நடத்திவரும் போராட்டங்களுக்கு மத்திய அரசு செவிமடுக்கவில்லை, கிறிஸ்தவம் தழுவினாலும் அதே இட ஒதுக்கீட்டை பெற்றிட சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசைவலியுறுத்த வேண்டும்.

சாதியால் அடையாளப்படுத்துவதை பெருமையாக கருதும் சமூக கட்டமைப்பில் சாதிய அடையாளத்தை அவமானமாக கருதும் தன்மை கொண்டவர்கள் பட்டியல் வகுப்பினர். எனவே அவர்களது குடியிருப்பைகாலனிஎன்று குறிப்பிடுவதற்கு பதிலாக சான்றோர் குடியிருப்பு அல்லது தொல்தமிழர் குடியிருப்பு என குறிப்பிட வேண்டும், மேலும் தாழ்த்தப்பட்டோர் என்ற சொல்லுக்கு பதிலாக பட்டியல் வகுப்பார் என்ற சொல்லையே அரசு பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# இளைஞர் காவல் நிலையத்தில் பலி விஸ்வரூபமெடுக்கிறது

# பரோட்டா பார்சலில் பாம்புத் தோல் பீதியில் பொதுமக்கள்





# பல்லக்கு:சடங்கை விட சட்டமே முக்கியம்

சென்னை / புதுக்கோட்டை | 07.05.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

07.05.2022 சனி

புதுகை
# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**இரவீந்திரநாத் தாகூர்** , நோபல் பரிசு பெற்ற இந்திய எழுத்தாளர், கவிஞர் (பி, 1861) (இ. 1941)



**பாண்டுரங்க வாமன் காணே** , இந்திய இந்தியவியலாளர், சமக்கிருத அறிஞர் (பி, 1880) (இ. 1972)



**தமிழவேள் உமாமகேசுவரனார்** , தமிழகத் தமிழறிஞர் (பி, 1883 ) (இ. 1941)



**சு. திருநாவுக்கரசர்** , தமிழக அரசியல்வாதி (பி, 1949 )



## இன்றைய நினைவு நாள்

**பி. கண்ணாம்பா** , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி, 1910) (இ. 1964)



**சாம் தம்பிமுத்து** , இலங்கை அரசியல்வாதி (பி, 1990) (இ. 1932)



**எம். ஒய். இக்பால்** , சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி (பி, 1951) (இ. 2021)



திரு.மு.க.ஸ்டாலின் முதல்வராக பதவியேற்று ஓராண்டு நிறைவு



புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்


விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,

பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577


சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்